## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

Sessions Case No.66/2006

Deposition of witness – PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : துரைசாமி | Caste | : |
| S/o. | : சீரங்கன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 19.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused absconded and declared as proclaimed offender on 09.06.2025 and NBW pending from 27/02/2006.

முதல் விசாரணை;

நான் மல்லசமுத்திரம், பாலமேட்டில் குடும்பத்துடன் குடியிருக்கிறேன். எனக்கு தரணிதேவி, ராணி என்ற பெண் மக்கள், மற்றும் ராஜன் என்ற மகனும் உள்ளார்கள். தரணிதேவியை பாலமேட்டிலேயே உள்ள முத்து என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தேன். அவர்களுக்கு சுகவனேஸ்வரி, புவனேஸ்வரி என்ற 2 பெண் பிள்ளைகளும் மாதேஸ் என்ற மகனும் உள்ளார்கள்.

சுகவனேஸ்வரியை பள்ளிபாளையத்தில் உள்ள ஓடப்பள்ளியில் உள்ள பரமசிவம் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். பரமசிவம் கட்டிட கான்ட்ராக்ட் வேலை செய்து வந்தார். எனது பேத்தி சுகவனேஸ்வரிக்கும் அவரது கணவர் பரமசிவத்திற்கும் தகராறு ஏற்பட்டு சுகவனேஸ்வரி பாலமேட்டில் உள்ள எனது மகள் வீட்டிற்கு வந்துவிட்டார்.

மீண்டும் பரமசிவம் பாலமேட்டிற்கு வந்து சுகவனேஸ்வரியை நன்றாக வைத்துக்கொள்வதாகவும் இனிமேல் எந்த தகராறும் செய்யமாட்டேன் என்று கூறி தன்னுடன் அனுப்பி வைக்குமாறு பரமசிவம் கேட்டதால் அவர்களை சேலம் சீரகாபாடியில் உள்ள சமத்துவபுரத்தில் தனிக்குடித்தனம் வைத்தோம்.

சுமார் 20 வருடத்திற்கு முன்னர் ஆடி பண்டிகைக்காக எனது பேத்தியை அழைக்க எனது மகளும் மருமகனும் வந்து ஊருக்கு அழைத்து வந்தார்கள். பண்டிகை முடிந்து சமத்துவபுரம் வந்து இருந்தபோது அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டதால் பரமசிவம் எனது பேத்தியின் தலையில் இரும்பு பைப்பை கொண்டு அடித்ததால் தலையில் அடிபட்டு எனது பேத்தி இறந்துவிட்டார். மேற்படி இரும்பு பைப்பை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு பைப்தான் மேற்படி இரும்பு பைப் ஆகும். அது ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பரமசிவம் சம்பவத்திற்கு பிறகு எங்கு சென்றார் என்று தெரியவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.